
அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

## 42 - இந்து சமயம்

### புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

## 42 - இந்து சமயம்

## புதிய பாடத்திட்டம்

## புள்ளி வழங்கும் திட்டம்

இது இரண்டு பகுதிகளைக் கொண்டது. பகுதி ஒன்றின் மூன்று வினாக்களில் ஏதேனும் இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ள 5 வினாக்களில் ஏதேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் 5 வினாக்களுக்கு பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் பத்திரம் II இற்கு மொத்தம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

- பத்திரம் I க்கு 50 x 1 = 50 புள்ளிகள்
- பத்திரம் II க்கு 5 x 20 = 100 புள்ளிகள்

இறுதிப்புள்ளி கணக்கிடல்

| | | |
|---|---|---|
| பத்திரம் I | - | 50 புள்ளிகள் |
| பத்திரம் II | - | 100 புள்ளிகள் |
| இறுதிப்புள்ளிகள் | - | $50+\left(\frac{100}{2}\right)=100$ |

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) .................................................................................
.................................................................................
................................................................................. ✓ △ 4/5

(ii) .................................................................................
.................................................................................
................................................................................. ✓ △ 3/5

(iii) .................................................................................
.................................................................................
................................................................................. ✓ △ 3/5

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

ooo

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022 (2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022 (2023)

| | | |
|---|---|---|
| හින්දු ධර්මය I<br>இந்து சமயம் I<br>Hinduism I | **42 T I** | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>*Two hours* |

**அறிவுறுத்தல்கள்:**

※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.

● **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. **பொருந்தாததைத்** தெரிவுசெய்க.

**1.** (1) லிங்க புராணம் (2) வராக புராணம் (3) வாமன புராணம்
(4) மார்க்கண்டேய புராணம் (5) பதும புராணம்

**2.** (1) திருவிருத்தம் (2) திருவாசிரியம் (3) திருச்சந்தவிருத்தம்
(4) பெரிய திருவந்தாதி (5) திருவாய்மொழி

**3.** (1) பரதம் (2) கூத்து (3) காவடி
(4) கும்மி (5) கோலாட்டம்

**4.** (1) சிவம் (2) புருடன் (3) சக்தி
(4) நாதம் (5) விந்து

**5.** (1) ஆரியப்பட்டர் (2) வராஹமிஹிரர் (3) பிரம்ம குப்தர்
(4) சரகர் (5) புளிசர்

● **6** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிச் சொற்கள்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. **பொருந்தாத** அச்சோடிச் சொற்களைத் தெரிவுசெய்க.

**6.** (1) இருத்தல் - இந்திரிய வழிச் செல்லுதல்
(2) கிடத்தல் - இந்திரிய வழியில் ஒன்றி நிற்றல்
(3) இயற்றல் - நன்மை தீமைகளைச் செய்தல்
(4) மேவல் - முயலுதல்
(5) பரநிந்தை - பிறர்பழி கூறல்

**7.** (1) இருக்குவேதம் - ஐதரேய பிராமணம்
(2) கிருஷ்ண யசுர்வேதம் - தைத்திரிய பிராமணம்
(3) சுக்கில யசுர்வேதம் - கௌசீதகி பிராமணம்
(4) சாமவேதம் - சாந்தோக்கிய பிராமணம்
(5) அதர்வவேதம் - கோபதப் பிராமணம்

8. (1) ந - திருக்கரம்
(2) ம - திருவயிறு
(3) சி - திருத்தோள்
(4) வா - திருமுகம்
(5) ய - திருமுடி

9. (1) விகற்பம் - தன்னைவிடப் பிறர் ஒவ்வாரெனல்
(2) கற்பம் - பிடித்ததைப் பிடித்திருத்தல்
(3) மோகம் - ஒன்றிற்கு ஆசைப்படுதல்
(4) குரோதம் - கோபங் கொண்டு நினைத்தல்
(5) அஞர் - அகங்காரம் மேலிடுதல்

10. (1) தாஸ்யம் - தந்தை மகன் உறவு
(2) சகியம் - தோழமை உறவு
(3) வாத்சல்யம் - குழந்தை மேல் தாய்க்குள்ள பாசம்
(4) காந்தம் - கணவன் மனைவி உறவு
(5) மதுரம் - காதலன் காதலி உறவு

- **11** தொடக்கம் **15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **அ, ஆ** என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. **'அ'** நிரலுக்கு ஏற்ற விதத்தில் **'ஆ'** நிரலில் உள்ள விடயங்கள் பொருத்தமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

11.

| | அ | | ஆ |
|---|---|---|---|
| (i) | சாங்கியம் | A - | மத்துவர் |
| (ii) | யோகம் | B - | கௌடபாதர் |
| (iii) | அத்வைதம் | C - | இராமானுஜர் |
| (iv) | விசிட்டாத்வைதம் | D - | கபிலர் |
| (v) | துவைதம் | E - | பதஞ்சலி |

(1) EDBCA (2) DEBCA (3) BECDA (4) DBEAC (5) AEBCD

12.

| | அ | | ஆ |
|---|---|---|---|
| (i) | இருக்கு வேதம் | A - | வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் |
| (ii) | பஞ்சாங்கம் | B - | வருடத்தின் 365 நாட்களைக் கொண்டது |
| (iii) | பிதாமஹ கோட்பாடு | C - | கிரகங்களின் அசைவுக் கணிப்பு |
| (iv) | சூரியக் கோட்பாடு | D - | கீதிகா, கணிதம், காலக்கிரியா பாடம், கோளம் |
| (v) | மகா ஆரிய சித்தாந்தம் | E - | ஒஷதி சூக்தம் |

(1) CABED (2) EACBD (3) EABCD (4) DABCE (5) BACDE

13.

| | அ | | ஆ |
|---|---|---|---|
| (i) | சல வடிவம் | A - | ஓரிடத்தில் நிலையாக நிறுவப்படுபவை |
| (ii) | அசல வடிவம் | B - | இடத்துக்கிடம் நகர்த்தக் கூடியவை |
| (iii) | சிற்பக் கலைக் களஞ்சியம் | C - | மாமல்லபுர கடற்கரைக் கோயில் |
| (iv) | பெரிய கற்றளி | D - | தர்மராஜ ரதம் |
| (v) | ஜலசயனம் | E - | காஞ்சி கைலாசநாதர் கோயில் |

(1) BADEC (2) ABCDE (3) EDCBA (4) DECBA (5) CABED

14.

| | அ | | ஆ |
|---|---|---|---|
| (i) | இராஜசிம்மன் | A - | ரதக்கோயில்கள் |
| (ii) | மகாபாரதம் | B - | கூரம் சிவன்கோயில் |
| (iii) | பரமேசுவரவர்மன் | C - | ஏழு காண்டங்கள் |
| (iv) | இராமாயணம் | D - | கலியுகத்தில் அசரீரி கேட்டவன் |
| (v) | மாமல்லன் | E - | பதினெட்டு பர்வங்கள் |

(1) BCDEA (2) DCBEA (3) DBCAE (4) DEBCA (5) ACBED

| | அ | | ஆ |
|---|---|---|---|
| **15.** (i) | சிவாகமங்கள் | A - | சங்கிதைகள் |
| (ii) | சரியா பாதம் | B - | சிவபேதம், உருத்திர பேதம் |
| (iii) | வைணவ ஆகமங்கள் | C - | தந்திரங்கள் |
| (iv) | கிரியா பாதம் | D - | அலகிடல், மெழுகிடல் |
| (v) | சாக்தாகமங்கள் | E - | மந்திரம், உற்சவம் |

(1) ADCEB (2) BDACE (3) CDABE (4) ABCDE (5) BDAEC

- **16** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**16.** கோயிற் கிரியைகளில் ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தைப் பண்படுத்துதல்
(1) பிரதிஷ்டை (2) கர்ஷணம் (3) உற்சவம்
(4) பிராயச்சித்தம் (5) சிலாசங்கிரணம்

**17.** அத்வைதக் கோட்பாட்டின் திறவுகோலாக அமையப்பெற்ற நூல்
(1) வேதாந்தசாரம் (2) சர்வமூலம்
(3) தேவாரம் வேதசாரம் (4) மாண்டுக்கிய காரிகை
(5) சிவஞான மாபாடியம்

**18.** இந்துசமய மரபில் விசேடமாக பாவம் செய்தவர்களுக்கான தண்டனை முறைகள் பற்றிக் குறிப்பிடும் புராணம்
(1) பவிஷ்ய புராணம் (2) இலிங்க புராணம் (3) கருட புராணம்
(4) ஸ்கந்த புராணம் (5) மார்க்கண்டேய புராணம்

**19.** "விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கும் அரும்பு மலர்காய்கனி போலன்றோ பராபரமே" எனப் பாடியவர்
(1) தாயுமானவர் (2) குமரகுருபரர் (3) அருணகிரிநாதர்
(4) கச்சியப்ப சிவாச்சாரியார் (5) சேக்கிழார்

**20.** வைகாசிப் பூரணையைக் குளிர்த்தி நாளாகக் கொண்டு வழிபாடு செய்யப்படும் தெய்வம்
(1) மாரி அம்மன் (2) காளி அம்மன் (3) பேச்சி அம்மன்
(4) கண்ணகி அம்மன் (5) திரௌபதை அம்மன்

**21.** "ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம் வழுக்கிலா தவம்..." எனக் குறிப்பிடும் நூல்
(1) சிவஞானபோதம் (2) சிவப்பிரகாசம் (3) திருமந்திரம்
(4) திருவருட்பயன் (5) சிவஞான சித்தியார்

**22.** ஈழத்தில் தோற்றம் பெற்ற 'சந்தான மணி' எனும் சோதிட நூலை எழுதியவர்
(1) சபாபதி (2) அம்பலவாணபிள்ளை (3) இடைக்காடர்
(4) சோமசன்மா (5) போசராச பண்டிதர்

**23.** தமிழகத்தில் சிறுத்தொண்டரால் வழிபடப்பட்ட விநாயகர் வடிவம் அமைந்துள்ள இடம்
(1) சிதம்பரம் (2) திருநாரையூர் (3) வாதாபி
(4) கணபதீச்சரம் (5) திருவாரூர்

**24.** "தற்பரம் கண்டுளோர் சைவசித்தாந்தரே" எனக் குறிப்பிடுவது
(1) திருமந்திரம் (2) மணிமேகலை (3) சிவஞான சித்தியார்
(4) சிவப்பிரகாசம் (5) சிவஞானபோதம்

**25.** 'பரிவாதினி' என்னும் பெயர் கொண்ட வீணையில் வல்லவன்
(1) மாமல்லன் (2) நந்திவர்மன் (3) இராஜசிம்மன்
(4) மகேந்திரவர்மன் (5) இராஜராஜசோழன்

**26.** 'கோணேசர் கல்வெட்டு' தோற்றம் பெற்ற காலப்பகுதி
(1) பொலநறுவைக் காலம் (2) ஆரியச் சக்கரவர்த்திகள் காலம்
(3) போர்த்துக்கேயர் காலம் (4) ஒல்லாந்தர் காலம்
(5) ஆங்கிலேயர் காலம்

27. 'பிரபோத சைதன்யர்' எனும் தீட்சாநாமத்தை உடையவர்
(1) சுவாமி விவேகானந்தர் (2) வள்ளலார்
(3) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் (4) இராமகிருஷ்ணர்
(5) சுவாமி விபுலாநந்தர்

28. வேதகால வேள்விக் கிரியைகளில் பிரதான இடம் வகிப்பவர்கள்
(1) புரோகிதன், அரசன், உருத்திரன் (2) உருத்திரன், புரோகிதன், சோமன்
(3) சோமன், அக்கினி, வருணன் (4) அக்கினி, சோமன், புரோகிதன்
(5) வருணன், அரசன், சோமன்

29. 'ஓம் நாராயணாய நமஸ்கிருதய' என ஒவ்வொரு அத்தியாயத்தினதும் ஆரம்பத்தில் குறிப்பிடும் நூல்
(1) மகாபாரதம் (2) இராமாயணம் (3) நாராயணீயம்
(4) பாஞ்சராத்திரம் (5) வைகானசம்

30. விநாயகர் திருவுருவத்தில் 'மறைத்தல்' எனும் தத்துவத்தைக் குறிக்கும் அங்கம்
(1) எழுத்தாணி பிடிக்கும் கரம் (2) அமுதகலசம் ஏந்திய கரம்
(3) மோதகம் இருக்கும் கரம் (4) பாசம் கொண்டிருக்கும் கரம்
(5) அங்குசம் ஏந்திய கரம்

● **31** தொடக்கம் **35** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் **பொருந்தாததைத்** தெரிவுசெய்க.

31. **அட்டாங்க யோகம்**
(1) தீய செயல்களைத் தவிர்க்கின்றது
(2) மூச்சைப் பயிற்றுவிக்கும் பயிற்சியைத் தருகின்றது
(3) இசையால் இறைவனை வழிபடத் துணைபுரிகின்றது
(4) குறித்த விடயத்தில் மனதைப் பதிக்க வைக்கின்றது
(5) புலனடக்கத்திற்கு வழிசமைக்கின்றது

32. **சைவசித்தாந்த சத்காரியவாதம்**
(1) உள்ளது இல்லாததாகாது
(2) இல்லாதது உள்ளதாகாது
(3) உள்ளதிலிருந்து உள்ளதே தோன்றும்
(4) இல்லாததிலிருந்து உள்ளது தோன்றாது
(5) உள்ளது இல்லாததைப் போல் தோன்றும்

33. **புராண இலக்கியங்கள்**
(1) திருமுறைகளிலும் ஆழ்வார் பிரபந்தங்களிலும் செல்வாக்குப் பெற்றன
(2) சிற்ப, ஓவிய, நடனக் கலைகளுக்கு கருவாக அமைந்தன
(3) அதர்வண வேதம் நான்காவது வேதமாக உள்ளடக்கப்படக் காரணமாக அமைந்தன
(4) பிற்கால வடமோடி நாடகம், காவியங்களுக்கு முன்னோடியானவை
(5) புராணபடனமரபு, கந்தபுராண கலாசாரம் என்பன தோன்ற வழிவகுத்தன

34. **ஐயடிகள் காடவர்கோன்**
(1) க்ஷேத்திரவெண்பா எனும் நூலை இயற்றியவர்
(2) சிவத்தலங்களின் பெருமைகள் பற்றிப் பாடியவர்
(3) திருமுறை ஆசிரியர்களுள் இவரும் ஒருவர்
(4) நந்திவர்மனே ஐயடிகள் காடவர்கோன் எனப்பட்டார்
(5) பல்லவர் கால அரசர்களுள் சிவனடியாராகவும் அறியப்பட்டவர்

35. **சுஸ்ருதர்**
(1) அறுவைச் சிகிச்சையின் தந்தை எனப் போற்றப்பட்டவர்
(2) அறுவை மருத்துவம் பற்றிய சுஸ்ருத சம்ஹிதை எனும் நூலை எழுதியவர்
(3) அக்கினிவேசரின் நூலைத் தழுவி தனது நூலை எழுதியவர்
(4) அறுவைச் சிகிச்சைக்கு உட்படுபவரின் உணர்வினை மறக்கச் செய்ய மதுவைப் பயன்படுத்தக் கூறியவர்
(5) மனநலம், கண்நோய் என்பன பற்றி எடுத்துக்கூறியவர்

● மேல்வரும் பகுதியில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்டவொரு விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் **36** தொடக்கம் **40** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>ஆத்ம நிவேதனம் | B<br>பிருஹத் சம்கிதை | C<br>சைவ வினாவிடை | D<br>சிதம்பர மான்மியம் | E<br>உடுக்கு |
| F<br>சேக்கிழார் புராணம் | G<br>சல்லாரி | H<br>பிரபக்தி | I<br>சரசோதி மாலை | J<br>சைவதூஷண பரிகாரம் |

**36.** சோதிடக் கலையோடு தொடர்புடைய சேர்மானம்
(1) AB (2) BD (3) AD (4) BI (5) DI

**37.** சரணாகதியுடன் தொடர்புடைய சேர்மானம்
(1) AC (2) AH (3) BC (4) BH (5) HI

**38.** ஆறுமுக நாவலரோடு தொடர்புடைய சேர்மானம்
(1) AC (2) BC (3) CI (4) CJ (5) DJ

**39.** உமாபதி சிவாச்சாரியாரோடு தொடர்புடைய சேர்மானம்
(1) CD (2) DF (3) CJ (4) DJ (5) GJ

**40.** காவடியாட்டத்துடன் தொடர்புடைய சேர்மானம்
(1) AB (2) AE (3) EG (4) EH (5) GH

● **41** தொடக்கம் **50** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் தலைப்புக்கு மிகப் பொருத்தமானதைத் தெரிவுசெய்க.

**41.** அத்வைதம் கூறும் முத்தி
(1) உலகம் பொய் என்றுரைத்தல்
(2) ஆன்மா இல்லை என்றுரைத்தல்
(3) ஆன்மா தன்னைப் பிரம்மமாக உணர்தல்
(4) அறியாமையிலிருந்து விடுபடுதல்
(5) ஜீவன் முத்தி, விதேக முத்தி என இருவகைப்படுதல்

**42.** புருடார்த்தக் கோட்பாட்டின் தாற்பரியம்
(1) வீட்டையும் சுற்றுச் சூழலையும் சுத்தப்படுத்துதல்
(2) அறவழியில் வாழவேண்டுமெனக் கூறுதல்
(3) மனித வாழ்விற்குப் பொருளின் அவசியத்தினைக் கூறுதல்
(4) இல்லற வாழ்வின் அவசியத்தினை வலியுறுத்துதல்
(5) சிற்றின்பத்தை முறையாக அனுபவிக்க வழிவகுத்தல்

**43.** ஞானயோகம்
(1) மூவகை யோகங்களில் ஒன்று
(2) பகவத்கீதையின் பதின்மூன்று - பதினெட்டாம் அத்தியாயம் வரை கூறப்படுகின்றது
(3) ஞானமே விடுதலைக்குரிய வழி எனச் சங்கரர் குறிப்பிடுகின்றார்
(4) மெய்ஞானத்தினால் இறைவனோடு இணைதல்
(5) ஞானம் அபரஞானம், பரஞானம் என இருவகைப்படும்

**44.** சிவராத்திரி
(1) சிவனுக்குரிய விரத நாள்
(2) விஷ்ணு, பிரமன் இருவரும் சிவனின் அடிமுடி தேடிய காலம்
(3) சிவராத்திரி ஐந்து வகைப்படும்
(4) மகாசிவராத்திரி மாசிமாத சதுர்த்தசித் திதியில் அனுட்டிக்கப்படும்
(5) சிவன் சோதிவடிவில் வெளிப்பட்ட இரவு

45. மத்துவ வேதாந்தத்தின் முக்கிய கோட்பாடு
(1) ஈஸ்வரன் படைப்புக் கடவுள்
(2) தூயபக்தியே விடுதலைக்கு வழி
(3) முப்பொருளுண்மையை ஏற்றுக் கொள்வது
(4) ஜீவாத்மாக்கள் பந்தப்பட்டவை
(5) முப்பொருட்களுக்கிடையிலான வேறுபாட்டினை முதன்மைப்படுத்துவது

46. திருக்கேதீஸ்வரம்
(1) கேது வழிபட்ட தலமாகத் திகழ்வது
(2) மஹா துவட்டாபுரம் என அழைக்கப்பட்டது
(3) மன்னார் - மாதோட்டம் என்ற இடத்தில் அமைந்துள்ளது
(4) இராசேந்திர சோழனால் புனருத்தாரணம் செய்யப்பட்டது
(5) புராதன சிவத்தலங்களில் ஒன்றாகும்

47. இந்து மருத்துவம்
(1) சங்க நூல்களில் மருத்துவரின் இயல்பு கூறப்பட்டுள்ளது
(2) பல்லவர் கால இலக்கியங்கள், கல்வெட்டுக்களில் மருத்துவக் குறிப்புக்கள் நிறைந்துள்ளன
(3) குந்தவைப் பிராட்டியார் தந்தையின் நினைவாகத் தஞ்சையில் மருந்தகத்தை அமைத்தார்
(4) நோயைக் கண்டறிந்து அதனைக் குணப்படுத்தும் முறையைக் குறிப்பிடுகிறது
(5) சோழர்கால இலக்கியங்களில் மருந்து, மருத்துவர்களைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன

48. இந்து சீர்திருத்தச் சிந்தனையாளர்கள்
(1) சமுதாய விழிப்புணர்வைச் செய்தவர்கள்
(2) இயற்கை நியதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்கள்
(3) மூடக் கொள்கைகளைக் களைந்தவர்கள்
(4) சாதி வேறுபாட்டை மறுத்தவர்கள்
(5) அறவழியில் சமுதாயத் தொண்டு செய்தவர்கள்

49. திருமந்திரம்
(1) தமிழ் மூவாயிரம் எனச் சிறப்பிக்கப்படுவது
(2) ஒழுக்கத்தை வலியுறுத்திக் கூறும் நூல்
(3) பௌதிக அறிவியல்களைக் கொண்டது
(4) சித்தாந்த தத்துவ உண்மைகளைக் கூறுவது
(5) யோகவியல் பற்றி உரைப்பது

50. திருநாவுக்கரசர்
(1) அரசனை மதம் மாற்றியமை
(2) அற்புதங்கள் புரிந்தமை
(3) தலயாத்திரை செய்தமை
(4) சரியைத் தொண்டினால் முத்தி பெற்றமை
(5) சமண நெறியில் நின்றமை

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

විෂය අංකය / பாட இலக்கம்: **42**　　විෂයය / பாடம்: **இந்து சமயம்**

ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 5 | 11. | 2 | 21. | 5 | 31. | 3 | 41. | 3 |
| 02. | 3 | 12. | 3 | 22. | 1 | 32. | 5 | 42. | 2 |
| 03. | 1 | 13. | 1 | 23. | 4 | 33. | 3 | 43. | 4 |
| 04. | 2 | 14. | 4 | 24. | 1 | 34. | 4 | 44. | 5 |
| 05. | 4 | 15. | 5 | 25. | 4 | 35. | 3 | 45. | 5 |
| 06. | 4 | 16. | 2 | 26. | 2 | 36. | 4 | 46. | 1 |
| 07. | 3 | 17. | 4 | 27. | 5 | 37. | 2 | 47. | 4 |
| 08. | 1 | 18. | 3 | 28. | 4 | 38. | 4 | 48. | 5 |
| 09. | 5 | 19. | 1 | 29. | 1 | 39. | 2 | 49. | 2 |
| 10. | 1 | 20. | 4 | 30. | 4 | 40. | 3 | 50. | 4 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 50 = 50

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

හින්දු ධර්මය II
**இந்து சமயம் II**
Hinduism II

**42 T II**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும், பகுதி **II** இலிருந்து எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (அ) புராணம் என்பதன் பொருளைத் தருக. (2 புள்ளிகள்)

(ஆ) புராணங்களின் பகுப்பு முறையைச் சுருக்கமாக அறிமுகஞ் செய்க. (4 புள்ளிகள்)

(இ) புராணங்கள் குறிப்பிடும் சமய நெறிகள் குறித்து விளக்குக. (6 புள்ளிகள்)

(ஈ) புராண இலக்கியங்கள் பிற்கால சமய மரபுகளில் ஏற்படுத்திய செல்வாக்கினை விவரிக்குக. (8 புள்ளிகள்)

**2.** (அ) **'ஆழ்வார்'** என்ற சொல்லின் பொருள் விளக்கத்தைத் தருக. (4 புள்ளிகள்)

(ஆ) பன்னிரு ஆழ்வார்களுள் **நால்வரின்** பெயர்களைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(இ) பல்லவர்காலப் பக்தி இயக்க வளர்ச்சியில் ஆழ்வார்களின் பங்களிப்பினைச் சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

(ஈ) பிற்கால வைணவசமய தத்துவ நெறிகளின் வளர்ச்சியில் ஆழ்வார்களின் வகிபங்கினை மதிப்பிடுக. (6 புள்ளிகள்)

**3.** (அ) விக்கிரகம் அமைக்கப் பயன்படும் பொருட்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ஆ) விக்கிரகங்கள் நிறுவப்படும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்துக. (4 புள்ளிகள்)

(இ) விக்கிரகம் வார்க்கும் முறையினைச் சுருக்கமாக விவரிக்குக. (6 புள்ளிகள்)

(ஈ) நடராஜ வடிவம் உணர்த்தும் தத்துவக் கருத்துக்களை விளக்குக. (8 புள்ளிகள்)

## பகுதி II

4. வேதாந்த மரபில் இராமானுஜரின் விசிட்டாத்துவைதம் பெறுகின்ற முக்கியத்துவத்தினை மேல்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(அ) விசிட்டாத்துவைதம் - பொருள் விளக்கமும் பிரமாணங்களும் (5 புள்ளிகள்)

(ஆ) இறைவன் (5 புள்ளிகள்)

(இ) பிரபஞ்சம் (5 புள்ளிகள்)

(ஈ) ஆன்மாவும் விடுதலையும் (5 புள்ளிகள்)

($5 \times 4 = 20$ புள்ளிகள்)

5. சைவசித்தாந்தப் பதிக் கொள்கையினை மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.

(அ) பதியின் இருப்பு (5 புள்ளிகள்)

(ஆ) சொரூப இலக்கணம் (5 புள்ளிகள்)

(இ) முத்திருமேனிகள் (5 புள்ளிகள்)

(ஈ) பஞ்சகிருத்தியம் (5 புள்ளிகள்)

($5 \times 4 = 20$ புள்ளிகள்)

6. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவசமய வளர்ச்சிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஆற்றிய பணிகளை மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.

(அ) காலச் சூழல் (5 புள்ளிகள்)

(ஆ) கல்விப் பணிகள் (5 புள்ளிகள்)

(இ) சமூகப் பணிகள் (5 புள்ளிகள்)

(ஈ) சமயப் பணிகள் (5 புள்ளிகள்)

($5 \times 4 = 20$ புள்ளிகள்)

7. ஆகமம் சாரா வழிபாட்டு நெறியில் மேல்வரும் தெய்வங்களுக்கு உரிய இடத்தினை விளக்குக.

(அ) கண்ணகி (5 புள்ளிகள்)

(ஆ) அண்ணமார் (5 புள்ளிகள்)

(இ) பெரியதம்பிரான் (5 புள்ளிகள்)

(ஈ) ஐயனார் (5 புள்ளிகள்)

($5 \times 4 = 20$ புள்ளிகள்)

8. இந்துக்களின் வாழ்வியலை நெறிப்படுத்துவதில் மேல்வரும் நூல்கள் பெறும் முக்கியத்துவத்தினை எடுத்துக்கூறுக.

(அ) வேத உபநிடதங்கள் (10 புள்ளிகள்)

(ஆ) திருக்குறள் (10 புள்ளிகள்)

($10 \times 2 = 20$ புள்ளிகள்)

***

# பகுதி I

1. அ) **புராணம் என்பதன் பொருளைத் தருக.**

- புராணம் என்ற சொல்லிற்கு பழமை வாய்ந்தது என்று பொருள். புராதனம் என்ற சொல் புராணம் என்று வந்ததெனவும் கூறுவர்.

- புராணம் என்பது தெய்வீக வரலாற்றுக் கதை எனப் பொருள்படுகின்றது. பூரணாத் புராணம் இதி உச்சயதே. இது முழுமையானதால் புராணம் என்ற கருத்தும் உண்டு. தெய்வீக அகத் தூண்டுதலாய் அமைந்த உள்ளுயிர்ப்புச் செய்து வரும் நூல்களில் இது முதல் இடம் பெறுகின்றது.

**(02 புள்ளிகள்)**

ஆ) **புராணங்களின் பகுப்பு முறையை சுருக்கமாக அறிமுகம் செய்க.**

- புராணங்கள் வடமொழிப் புராணங்கள், தமிழ்மொழிப் புராணங்கள் எனப் பிரிக்கப்படுகின்றன. வடமொழிப் புராணங்கள் பதினெண் புராணங்கள், மகாபுராணங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. அவையாவன,

- சிவபுராணங்கள் – 10
  1. சிவபுராணம்
  2. பவிசிய புராணம்
  3. மார்க்கண்டேயபுராணம்
  4. இலிங்கபுராணம்
  5. ஸ்கந்தபுராணம்
  6. வராகபுராணம்
  7. வாமனபுராணம்
  8. மச்சபுராணம்
  9. கூர்மபுராணம்
  10. பிரமாண்டபுராணம்

- விஷ்ணு புராணம் – 04
  1. கருட புராணம்
  2. நாரதீய புராணம்
  3. வைணவ புராணம்
  4. பாகவத புராணம்

- பிரம புராணம் – 02
  1. பிரம புராணம்
  2. பதும புராணம்

- அக்கினி புராணம் - 01
  1. ஆக்கினேய புராணம்

- சூரிய புராணம் - 01
  1. பிரம கைவர்த்த புராணம்

**(04 புள்ளிகள்)**

**(இ) புராணங்கள் குறிப்பிடும் சமயநெறிகள் குறித்து விளக்குக.**

- தெய்வங்களின் தெய்வீக வரலாறுகளைக் கூறுவது.
- மகா புராணங்கள் பிரமா, விஷ்ணு, சூரியன், உருத்திரன் முதலானவர்களின் பரத்துவங்களைக் கூறுகின்றன.
- சிவபரத்துவம் – அடிமுடி தேடிய கதை
- விஷ்ணு பரத்துவம் – பாகவத புராண அவதாரம்
- சக்தி பரத்துவம் – துர்க்கை மகிடாசுரனை சங்கரித்தல்
- பக்தி மரபுகள் – மார்க்கண்டேயர், பக்த பிரகலாதன் கதைகள்

- திருக்கோயில் வழிபாட்டு வழிமுறைகளை எடுத்துரைப்பது - விரதம், தீர்த்தம், தவம், தலயாத்திரை, தோத்திரம்

**(6 புள்ளிகள்)**

**(ஈ) புராண இலக்கியங்கள் பிற்கால சமய மரபுகளில் ஏற்படுத்திய செல்வாக்கினை விவரிக்குக.**

- தல புராணங்களும், தமிழ்ப் புராணங்களும் தோன்றக் காரணமாக வடமொழிப் புராணங்கள் அமைந்தன.

- பிற்கால வடமொழி நாடகம், காவியங்களுக்கு முன்னோடியானவை.

- திருமுறைகளிலும் ஆழ்வார் பிரபந்தங்களிலும் புராணக்கதைகள் செல்வாக்குப் பெற்றமை.

- சிற்ப, ஓவிய, நடனக் கலைகளுக்கு கருவாக அமைந்தவை.

- மகாத்மியங்கள் / மான்மியங்கள் உருவாகக் காரணமானவை.

- புராணபடன மரபு, கந்த புராணக் கலாசாரம் என்பவை தோன்ற வழிவகுத்தமை.

- புராணங்கள் சமய சின்னங்களுக்கு அடிப்படையாக விளங்குவன. புராணங்கள் இறைநம்பிக்கையை வலுப்படுத்துவன. பக்தி, தவம், தானம், விரதம், தீர்த்தம், மூர்த்தி, தலம், தியானம் முதலான சமயவழிபாட்டு முறைகளை கூறுவன. சிவன், பிரமா, விஷ்ணு, சூரியன், முருகன், சக்தி முதலான தெய்வங்களின் பரத்துவம் பற்றிக் கூறுவன.

- இந்துசமயம் சார்ந்த தத்துவ உண்மைகளைப் பாமர மக்களுக்கு கதைவடிவில் புராணங்கள் எடுத்துக் கூறுவன.

  (உ - ம்) ஸ்கந்த புராணம் - சூரன்போர் - ஆணவத்தை அழித்தலைக் குறிக்கும்.
  மார்க்கண்டேய புராணம் - யம சங்காரம் - பக்தியின்சிறப்பு
  கருட புராணம் - பாவம் செய்தவர்களுக்குரிய தண்டனை - உலகில் சிறப்பாக வாழ்வதற்குரிய வழி முறைகள்

**(8 புள்ளிகள்)**

**2. (அ) ஆழ்வார் என்ற சொல்லின் பொருள் விளக்கத்தைத் தருக.**

- திருமாலின் மங்கள கல்யாண குணங்களில் தம்மை ஆழ்த்தியவர்களே ஆழ்வார்களாவர். திருமால் பக்தியில் மூழ்கித் திளைத்தவர்கள் ஆழ்வார்கள். திருமால் மீது தமிழில் பாசுரங்களை இசையுடன் பாடி வைணவ பக்தியை வளர்த்தார்கள். அன்பை விளக்காகவும், ஆர்வத்தை நெய்யாகவும் கொண்டு ஆன்ம ஒளி விளக்கேற்றி வழிபாடு செய்தவர்கள் ஆழ்வார்கள்.

**(4 புள்ளிகள்)**

**(ஆ) பன்னிரு ஆழ்வார்களுள் நால்வரின் பெயர்களைக் குறிப்பிடுக.**

- பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருப்பாணாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கை ஆழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், குலசேகர ஆழ்வார்.

**(4 புள்ளிகள்)**

**(இ) பல்லவர்கால பக்தி இயக்க வளர்ச்சியில் ஆழ்வார்களின் பங்களிப்பினைச் சுருக்கமாக விளக்குக.**

- பல்லவர் காலத்தில் பல்லவ அரசர்கள் ஆலயப் பணிகளில் ஈடுபட்டனர். வைதிக சமயத்திற்கு ஆதரவு செலுத்தும் நிலை காணப்பட்டது. இதனால் கலைஞர்கள், சிற்பிகள், புரோகிதர்கள் சமயப் பணிகளில் ஈடுபட்டனர். இந்த வரிசையில் ஆழ்வார்கள் வைணவ சமய வளாச்சியில் கணிசமான பங்களிப்பினைச் செய்தனர்.

- ஆலயங்களை வைதிகப் பண்பாட்டு நிலையங்களாக விளங்கச் செய்தனர். ஆலயங்களில் வேதக்கல்வி, தக்கணத்தின் வழியாகப் பரவிய வைணவ சமயம் தமிழகத்தில் புகுந்து, ஆழ்வார்கள் மூலமாகச் செல்வாக்குப் பெற்று, தென்கலை வைணவமாகச் சிறப்புற்றது.

- திருமால் மீது தமிழில் பாசுரங்களை இசையுடன் பாடி வைணவ பக்தியை வளர்த்தார்கள். அன்பை விளக்காகவும், ஆர்வத்தை நெய்யாகவும் கொண்டு ஆன்ம ஒளி விளக்கேற்றி வழிபாடு செய்தவர்கள் ஆழ்வார்கள். கடவுள் மீது இடையறாத பாசுரங்களைப் பஜனையாகப் பாடும் மரபையும் கொண்டவர்கள்.

- வைணவ பிரபந்தத்திற்கு புராண, இதிகாசக் கதைகளை ஆதாரமாகக் கொண்டனர். இதன் மூலம் இதிகாச புராணக் கதை மரபு என்பனவற்றை பரவச் செய்தனர். பல்வேறு பாவங்களில் விஷ்ணுவைப் போற்றினர். அவை தாஸ்ய, மதுர, வாத்சல்ய, சகிய முதலான பாவங்களாகும். மங்களாசனம் பெற்ற திவ்ய தேசங்களின் உருவாக்கத்திற்கு ஆழ்வார்கள் அடித்தளமிட்டனர்.

**(6 புள்ளிகள்)**

**(ஈ) பிற்கால வைணவசமய தத்துவ நெறிகளின் வளர்ச்சியில் ஆழ்வார்களின் வகிபங்கினை மதிப்பிடுக.**

- வைணவ சமய உண்மைகளான தத்துவம், இதம், புருடார்த்தம் என்ற மூன்று பிரிவுகளையும், அர்த்த பஞ்சஞானத்தையும், வைணவ சமய தத்துவங்கள், இறை பற்றிய உண்மைகள், இறைவனுக்குப் புரியும் கைங்கரியங்கள், வீடுபேறு முதலான வைணவ சமயக் கருத்துக்களையும் ஆழ்வார்கள் தமது பாடல்களில் குறிப்பிட்டு வைணவ சமய வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியுள்ளனர்.

- உபநிடதங்கள், பகவத்கீதை பிரமசூத்திரம் ஆகிய மூன்றும் வேதாந்தத்தின் அடிநிலைகளாகும். பிரம்மசூத்திரம் தத்துவபரம், உபாசனபரம் என்ற இரு பகுதிகளைக் கொண்டது. நம்மாழ்வாரின் திருவாய்

மொழியில் முதல் 10 பாசுரங்களும் "தத்துவபரம்" என்றும் அடுத்த 10 பாசுரங்களும் "உபாசனபரம்" என்றும் பூர்வாசாரியர்கள் நிச்சயித்துள்ளனர். பிரமசூத்திரத்தில் பொருள் விஷயமாக ஐயம் ஏற்படும்போது திருவாய் மொழியைக் கொண்டு அந்த ஐயம் தீரப் பெற்று, சூத்திர அர்த்தங்களைப் பாஷியக்காரர் நிர்ணயிப்பர் என்பார் அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்.

- இராமானுஜர் தனது விசிட்டாத்வைதக் கோட்பாட்டிற்குப் பிரமாண நூல்களாக ஆழ்வார் பிரபந்தங்களையே பிரதானமாகப் பயன்படுத்தினார். இதனால் விசிட்டாத்வைதம் உபயவேதாந்தம் என அழைக்கப்படுகின்றது. குறிப்பாக பெரியாழ்வாரது பாடல்களில் விசிட்டாத்வைதக் கோட்பாட்டின் தனிச்சிறப்பு எடுத்தியம்பப்படுகிறது. மத்துவருக்கும் இவை பிரமாண நூல்களாக அமைந்தன.

- ஆண்டாளின் திருப்பாவை, கன்னிப்பெண்கள், திருமாலின் சந்நிதியை அடைந்து அவனைத் துயிலெழுப்பித் தமது வேண்டுகோள்களை முன்வைப்பதாக அமைந்திருப்பதோடு, பாவை நோன்பை அநுட்டிக்கும் வகையும் சிறப்பாகத் திருப்பாவையில் பேசப்படுகிறது.

**(6 புள்ளிகள்)**

3. **(அ) விக்கிரகம் அமைக்கப் பயன்படும் பொருட்கள் இரண்டினைக் குறிப்பிடுக.**

- பொன், வெள்ளி, செம்பு, கல், மரம், சுதை, சர்க்கரை, பளிங்கு, ஓடு

**(2 புள்ளிகள்)**

**(ஆ) விக்கிரகங்கள் நிறுவப்படும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்துக.**

- சல விக்கிரகம் – இடத்துக்கிடம் நகர்த்தக்கூடிய விக்கிரகங்கள்
- அசல விக்கிரகம் – நிலையாக ஓரிடத்தில் நிறுவப்படும் விக்கிரகங்கள்
- சலாசல விக்கிரகம் – நகர்த்தக்கூடியதாக இருப்பினும் அவ்வாறு நகர்த்தக் கூடாது என்னும் நோக்கத்தில் நிறுவப்படும் வடிவங்கள்

**(4 புள்ளிகள்)**

**(இ) விக்கிரகம் வார்க்கும் முறையினைச் சுருக்கமாக விவரிக்குக.**

- உலோகத்தினால் எந்த உருவை செய்யவேண்டுமோ அந்த உருவைப்போல முதலில் மெழுகினால் செய்ய வேண்டும். மெழுகினாலான வடிவத்திற்கு மேல் புற்றுமண்ணை ஒன்றுக்கு மேல் ஒன்றாக மூன்று முறை பூச வேண்டும். இவ்வாறு பூசப்பட்ட மெழுகுப் பாவையை பல நாட்கள் நிழலில் உலரவிட்டு பின்னர் அதனை தீயிலிட வேண்டும். உள்ளிருக்கும் மெழுகு உருகி வெளியே வருவதற்கும் பின்னர் உலோகத்தை உருக்கி உள்ளே வார்ப்பதற்குமென மண்ணில் ஆங்காங்கே துளைகள் இடப்படும். மெழுகு உருகி வெளியே வந்ததும் மண் அச்சில் உலோகக் குழம்பை வார்ப்பர். இவ்வாறு வார்த்தெடுக்கப்பட்ட வடிவத்தை உளிகொண்டு செம்மைப்படுத்தி நுண்ணிய வேலைப்பாடுகளுடன் அழகு செய்வர்.

**(6 புள்ளிகள்)**

**(ஈ) நடராஜர் வடிவம் உணர்த்தும் தத்துவக் கருத்துக்களை விளக்குக.**

- சிவ வடிவங்களுள் ஒன்றாகிய நடராஜ வடிவம் சைவ சித்தாந்த, அறிவியல் சிந்தனைகளை வெளிப்படுத்துவதாக அமைகிறது. சைவ சித்தாந்தத்தில் கூறப்படும் பதி, பசு, பாசம் ஆகியவற்றுடன் தொடர்புடைய பல சிந்தனைகளை தன்னகத்தே கொண்ட வடிவமாக அது விளங்குகிறது.

- மெய்கண்ட சாத்திரங்களுள் ஒன்றாகிய உண்மை விளக்கம்
  "தோற்றம் துடியதனில் தோயுந்திதி அமைப்பில்
  சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் –
  ஊற்றமாம் ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி
  நான்ற மலர்ப்பதத்தே நாடு"
  எனும் பாடலில் நடராஜ வடிவம் பதியுடன் தொடர்புடைய ஐந்தொழில் தத்துவத்தின் குறியீடாக அமையும் விதம் விளக்கப்பட்டுள்ளது.

- அதாவது நடராஜ வடிவத்திலுள்ள உடுக்கை ஏந்திய கரம் – (சிருஷ்டி) படைத்தலையும் அபயகரம் – (திதி) காத்தலையும் தீ ஏந்திய கரம் – (சங்காரம்) அழித்தலையும் ஊன்றிய திருவடி – (திரோபவம்) மறைத்தலையும் தூக்கிய திருவடி – (அநுக்கிரகம்) அருளலையும் உணர்த்துவதாகத் தத்துவத் தொடர்பு கூறப்படுகிறது.

- சைவ சித்தாந்தத்தில் ஆன்ம விடுதலைக்குரிய சாதனமாக கூறப்படுவனவற்றுள் "நம சிவாய" மந்திரம் பிரதானமானது திருவருட்பயன் ஐந்தெழுத்தருள்நிலை எனும் அதிகாரத்தில் திருவைந்தெழுத்தின் பெருமையைப் பேசுகிறது. திருவருட்பயனில் "தோற்றம் துடி சிகரம் சிக்கனவா வீசுகரம்..........." எனும் பாடலில் நடராஜ வடிவம் சூக்கும பஞ்சாட்சர மாகிய சிவாயநம எனும் சிகராதி பஞ்சாட்சரத்தின் அடையாளமாக அமைகின்றமை கூறப்பட்டுள்ளது.

- அதேபோல் ஸ்தூல பஞ்சாட்சரமாகிய நமசிவாய எனும் நகராதி பஞ்சாட்சர மந்திர உபாசனையுடன் தொடர்புடையதாக அமைகின்றது. அதாவது ந – திருவடி, ம – திருவயிறு, சி – திருத்தோள், வா – திருமுகம் ய – திருமுடி என்று நடராஜ வடிவத்திற்கும் சைவ சித்தாந்தம் கூறும் திருவைந்தெழுத்திற்கும் உள்ள தொடர்பு கூறப்படுவதனைக் காணலாம்.

- நடராஜ வடிவத்தில் சிவன் அணிந்திருக்கும் ஆடைகள், ஆபரணங்கள், மற்றும் அவர் ஏந்தியுள்ள ஆயுதங்கள் முதலான அம்சங்களும் பல உண்மைகளை உணர்த்துகின்றன. அந்தவகையில் முயலகன் – ஆணவத்தால் கட்டுண்ட ஆன்மாவையும், பாம்பு – ஆணவத்தையும், புலித்தோல் – கோபத்தைக் கட்டுப்படுத்துபவன் என்பதையும், முக்கண்கள் – இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானசக்தியையும், வீரக்கழல் – பல வினைகள் பிறவித் துன்பத்தை நீக்குவதையும், பவளநிற மேனி – சிவனின் தூய்மைப்படுத்தும் தன்மையையும், நான்கு திருக்கரம் – எல்லையில்லா ஆற்றலையும், நெற்றிக்கண் – உயிர்களின் துன்பங்களைப் புன்முறுவலால் நீக்குவதையும் சடாமுடி – ஞானத்தையும், பிறை – பேரழகையும், திருநீறு – பராசக்தியையும், சூலம் – முச்சக்தியையும் கோடரி – பேராற்றலையும் அத்தகைய தத்துவ விளக்கங்கள் அமைகின்றன.

- நடராஜரைச் சூழவுள்ள திருவாசி ஓங்காரத்தைக் குறிப்பதாகவும்; அத்திருவாசியில் இடம்பெறும் சுடர்கள் நமசிவாயம் என்பதிலுள்ள எழுத்துக்களைச் சுட்டுவதாகவும் குறிப்பிடுவர். இத்திருவாசி ஆன்மாவானது பாச ஞானத்தை விட்டு பதி ஞானத்தை அடைவதன் மூலமே முத்தியைப் பெறமுடியும் என்பதை சுட்டுவதாகவும் கூறப்படுகிறது. உண்மை விளக்கம் “ஓங்காரமே நற்றிருவாசி உற்றஅதனில் நீங்கா எழுத்தே நிறை சுடராம்” என்பதன் மூலம் திருவாசி திருவைந்தெழுத்தினதும், அதன் சுடர்கள் அதன் அட்சரங்களினதும் அடையாளமாக அமைகின்றமை கூறப்பட்டுள்ளது.

(8 புள்ளிகள்)

## பகுதி II

**4. வேதாந்த மரபில் இராமானுஜரின் விசிட்டாத்வைதம் பெறுகின்ற முக்கியத்துவத்தினை மேல்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.**

**(அ) விசிட்டாத்வைதம் - பொருள் விளக்கமும் பிரமாணங்களும்**

- விசேடணங்கள் (உயிர்கள், உலகம்), விசேடியம்(ஈஸ்வரன்) என்பவற்றுக்கிடையிலான ஒன்றிய பிணைப்பைக்(விசிட்டம்) கூறுகின்ற தத்துவம் விசிட்டாத்வைதம் எனப்படுகின்றது. சித்து, அசித்து ஆகியவற்றை விசேடணங்களாக உடைய விசேடியமே ஈஸ்வரன். விசேடமாக உள்ள பொருள் ஒன்றே, இரண்டல்ல என்பதே இராமானுஜரின் கொள்கை. இவ்வாறு சிறப்பு நிலையிலான தன்மையைப் பேசுவதனைக் கருத்திற் கொண்டு இத்தத்துவம் விசிட்டாத்வைதம் எனப்படுகின்றது.
- பிரத்தியட்சம், அனுமானம், ஆப்தவாக்கியம் என்னும் மூவகைப் பிரமாணங்களை ஏற்றுக் கொள்கின்றார்.
- பிரஸ்தான திரயங்கள், விஷ்ணுபுராணம், பாகவத புராணம், வைணவ ஆகமங்கள், நாலாயிரத் திவ்யபிரபந்தம் என்பன பிரதான நூல்களாகும்.

**(5 புள்ளிகள்)**

**(ஆ) இறைவன்**

- சங்கரர் குறிப்பிடும் நிர்க்குண பிரம்மத்தை நிராகரித்த இராமானுஜர் சகுணப் பிரம்மம்(ஈஸ்வரன்) பற்றிப் பேசுகின்றார். ஶ்ரீமந் நாராயண மூர்த்தியே கடவுள்.
- பிரமம் பல்வேறு குணங்களையுடைய ஒரு பொருள். அவர் எல்லாம் அறிந்தவர் எல்லா வல்லமையுமுடையவர் எல்லாவித நன்மையும் செய்பவர், எல்லையற்றவர்.
- ஸத்தியத்துவம், ஞானத்துவம், அனந்தத்துவம், அமலத்துவம், சௌலாப்யம், சௌசீல்யம், காருண்யம் போன்ற குணங்கள் விசிட்டாத்வைத மரபில் ஈஸ்வரனுக்குரிய திவ்விய குணங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.
- இறைவனின் சக்தி ஶ்ரீ. ஶ்ரீயினின்றும் பிரிக்கமுடியாதவன் ஶ்ரீநிவாசன்.
- ஈஸ்வரனே இவ்வுலகின் முழுக் காரணன். ஒரே காரணனாயிருந்தாலும் அவன் இவ்வுலகில் நிகளும் மாற்றங்களால் சிறிதும் பாதிக்கப்படாதவன் இறைவன் வேறுபாடு அடைவதில்லை. இறைவன் இந்த உலகில் அடங்கியிருக்கின்றான். அதே சமயத்தில் இதைக் கடந்தும் நிற்கின்றான்.

**(5 புள்ளிகள்)**

**(இ) பிரபஞ்சம்**

- சிருஷ்டிக்கு முன்பு சூக்கும வடிவில் காலதத்துவத்துடன் தன்னில் ஒடுங்கிக் கிடந்த அசித்திலிருந்து சிருஷ்டிக் காலத்தில் பரு உலகை வெளிக்கொணர்வதற்கும் நிலைநிறுத்துவதற்கும் சங்காரத்தின் போது மீழ ஒடுங்குவதற்கும் ஈஸ்வரனே உபதான காரணனாயும்(முதற் காரணம்) நிமித்த காரணனாயும் உள்ளான்.
- பிரம்மம் உண்மையாகவே மாறி உலகாக சிருஷ்டி நிகழ்கிறது. இத்தகைய மாற்றம் பரிணாமம் எனப்படும். (உதாரணம் : பால் தயிராவது போல்)
- காரணமும் உண்மை, காரியமும் உண்மை. பாலும் உண்மை அதிலிருந்து தோன்றும் தயிரும் உண்மை. இது போன்றே காரணமாகிய பிரமமும் உண்மை, அதிலிருந்து தோன்றும் காரியமாகிய இவ்வுலகமும் உண்மை. பிரம்மம் உண்மையாகவே மாறி உலகமாகிறது. இதனைப் பிரம்ம பரிணாமவாதம் என வழங்குவர்.

**(5 புள்ளிகள்)**

**(ஈ) ஆன்மாவும் விடுதலையும்**

- சீவர்கள் ஈசுவரனுடைய சரீரங்கள். அவர்களிடம் அறிதல், செய்தல், நுகர்தல், தூய்மை, ஆனந்தம் ஆகிய பண்புகள் காணப்படும்.
- சீவன்கள், என்றுமுள்ளவை, எண்ணற்றவை, இயல்பாக அறிவுடையவை ஆயினும் அசித்தின் தொடர்பால் அறியாமையின் வசமாகி உலகியல் வசப்பட்டுக் கன்மபந்தத்தில் சிக்குகின்றன.
- ஆன்மாக்கள் மூன்று வகைப்படும்.
  1. நித்தியமுத்தர்கள்
  2. முத்தர்கள்
  3. பெத்தநிலை ஆன்மாக்கள்
- ஆன்மாவுக்குரிய முக்கிய குணம்(திரவியம்) ஞானமுடைமை. இந்த ஞானத்தை இராமானுஜர் தர்மபூத ஞானம் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கின்றார்.
- ஆன்மாக்கள் பிறவித் துன்பங்களிலிருந்து நீங்கி ஸ்ரீமத் நாராயணன் வீற்றிருக்கும் ஸ்ரீ வைகுண்டத்தை அடைவதே விடுதலையாகும்.
- வீடுபேற்றுக்குரிய வழிமுறைகளாக கர்மம், ஞானம், பக்தி என்பன கூறப்படுகின்றன.
- இலகுவான முறையில் இறைவனை அடைவதற்கு ஏதுவாக பிரபத்தி முன்வைக்கப்படுகின்றது.
- ஆன்மாக்கள் வீடுபேற்று நிலையில் விஷ்ணுவிற்குச் சமமான நிலையினை அடைகின்றனர். ஆயினும் விஷ்ணு ஆகிவிடுவதில்லை.

**(5 புள்ளிகள்)**

**5. சைவசித்தாந்தப் பதிக் கொள்கையினை மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.**

**(அ) பதியின் இருப்பு**

- உலகின் இருப்பினைக் கொண்டு இறை இருப்பினைச் சைவ சித்தாந்திகள் நிலைநாட்டுகின்றனர். காணுகின்ற இப் பருவுலகம் முன்னர் ஒடுங்கிய நிலையில் இருந்தது. பின்னர் காணப்படும் பருநிலையை அடைந்தது. இவ்வாறு நுண்ணிலையில் இருந்த உலகத்தை பருநிலைக்குக் கொண்டு வந்தவன் இறைவன்.
- இக்கருத்தினைச் சிவஞானபோதம் 'அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்....' எனும் சூத்திரத்தின் மூலம் தெளிவாக விளக்குகிறது.
- மேலும் இதனை விளக்கும் போது, குடம் என்னும் காரியப் பொருள் மண் என்னும் காரணப்பொருளிலிருந்து தோன்றியது. எனினும் குயவனின்றி மண் குடமாகமாட்டாது. எவ்வாறு மண் குடமாவதற்குக் குயவன் அவசியமோ அதனைப் போன்றே உலகத்தின் தோற்றத்திற்கும் இறைவன் இன்றியமையாதவன் என்பது சைவசித்தாந்திகளது கருத்து.

**(5 புள்ளிகள்)**

**(ஆ) சொரூப இலக்கணம்**

- பதியாகிய இறைவனின் சிறப்பியல்பை சொரூப இலக்கணம் என்பர்.
- இந்நிலையில் பதியானது குணம், குறிகளைக் கடந்தது ஏகமாயிருக்கும் எல்லாவற்றுக்கும் மேலானது உருவமற்றது ; காலம், இடம் இவற்றால் அளவுபடுத்தப்படாதது ; மலமற்றது ; என்றும் அழியாதிருப்பது; காட்சிக்கும் கருத்துக்கும் அப்பாற்பட்டதாக விளங்குவது.
- இறைவனின் இத்தகைய சிறப்பு நிலையினை மெய்கண்ட சாத்திர நூல்கள் பலவாறு விளக்கி நிற்கும்.

  "......பதிபரமே அதுதான்  
  நிலவும் அருவுருவின்றிக் குணங் குறிகளின்றி  
  நின்மலமாய் ஏகமாய் நித்த மாகி....... (சிவப்பிரகாசம்)

- "பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின்  
  அருமைக்கும் ஒப்பின்மையான்" (திருவருட்பயன்)

**(5 புள்ளிகள்)**

**(இ) முத்திருமேனிகள்**

- தடத்த நிலையில் சிவன் உருவம், அருவம், அருவுருவமாகிய மூன்று திருமேனிகளைத் தாங்கியவராய், வழிபாட்டிற்குரிய தெய்வமாய் உணர்ந்தறிவதற்கு எளியவனாய் விளங்குகிறார்.
- இம்மூன்று திருமேனிகளில் பதி நவபேதங்களைக் கொள்கிறது.

  உருவம் - பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன்,  
  அருவம் - சிவம், சக்தி, நாதம், விந்து,  
  அருவுருவம் - சதாசிவம்

**(5 புள்ளிகள்)**

**(ஈ) பஞ்சகிருத்தியம்**

- தடத்த நிலையில் இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் பஞ்சகிருத்தியங்களை உயிர்கள் இம்மை, மறுமை, வீடு என்னும் பயன்களைப் பெறும் பொருட்டு இயற்றுகின்றான்.

- படைத்தல் - ஆன்மாக்கள் கன்ம பலன்களை அனுபவித்தற் பொருட்டு தனு, கரண, புவன, போகங்களைத் தோற்றுவித்தல்.

- காத்தல் - ஆன்மாக்கள் கன்மங்களை அனுபவிக்கும் வரை காத்தல்.

- அழித்தல் - வினைப்பயனை அனுபவித்த ஆன்மாக்களை முதற் காரணத்தில் ஒடுக்குதல்.

- மறைத்தல் - ஆன்மாக்களைப் போக்கிய போகங்களில் மூழ்கச் செய்தல்.

- அருளல் - ஆன்மாக்களுக்கு மலபந்தத்தை விலக்கிச் சிவத்துவத்தை அளித்தல்.

- இறைவனது இவ்வைந்தொழில்கள் பற்றிச் சிவஞான சித்தியார்,
“அழிப்பு இளைப்பு ஆற்றல் ஆக்கம் அவ்வவர் கன்மமெல்லாம்
கழித்திட நுகரச் செய்தல்.....”

**(5 புள்ளிகள்)**

**6. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவசமய வளர்ச்சிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஆற்றிய பணிகளை மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.**

**அ) காலச்சூழல்**

- இலங்கை ஈழத்தில் போர்த்துகீச, டச்சு, ஆங்கிலேய காலனியாதிக்கங்களும், அவற்றின் ஆதரவில் முடுக்கி விடப்பட்ட சில கிறிஸ்துவ மிஷனரிகளின் சைவ சமய எதிர்ப்பு பிரசாரங்களும் யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலரை சைவ சமய எழு ஞாயிறாகத் தோன்றச் செய்தன.

- 19 ஆம் நூற்றாண்டில் மதமாற்றத்தோடு ஆங்கிலக்கல்வியை அளிப்பதும் ஆங்கிலேயர்களின் நோக்கமாயிருந்தது. கல்விக் கூடங்களும் மிஷனரிகளால் தொடக்குவிக்கப்பட்டன. விவிலிய வேத மூலம் கிறிஸ்தவம் கற்பித்தல், தேவாலயம் செல்ல வற்புறுத்தல், மாணவர்கள் தமது சமயாசாரங்களையும் சின்னங்களையும் கடைப்பிடிப்பதைத் தடுத்தல் முதலான தந்திரங்களைக் கையாண்டு வைச சமயத்திற்கு ஊறுவிளைவிப்பதில் பாதிரிமார் தீவிரமாயிருந்தனர்.

- ஆங்கிலக் கல்வியும், அதன் வழி அரசு ஊழிய பெரும் வாய்ப்பும், சைவ சமய உண்மை நெறி அறியா அறியாமையும் மேலோங்கி இருந்த சூழலில் சைவ சமயம், 'பிழைக்குமோ' என்ற பேரச்சம் பரவிய காலத்தில் யாழ்ப்பாணம் நல்லூரில் ஆறுமுக நாவலர் 18/12/1822 இல், கந்தப்பிள்ளை - சிவகாமி அம்மையார் தம்பதிகளுக்கு இறுதி மகவாகப் பிறந்தார்.

**(5 புள்ளிகள்)**

**ஆ) கல்விப் பணிகள்**

- சைவப்பிரகாச வித்தியாசாலைகளை அமைத்தார். உதாரணம்: 1848 இல் வண்ணார் பண்ணையிலும் 1864 இல் சிதம்பரத்திலும் 1872 இல் கோப்பாயிலும் வித்தியாசாலைகளை அமைத்தமை.

- 1871 புலோலியில் சைவ ஆங்கில வித்தியாசாலையை அமைத்தமை.

- வித்தியாசாலைகளுக்கு முகாமையாளராக இருந்தார்.

- பெண்களுக்கான கல்வி (3 ஆம் பாலபாடத்தில் விளக்கியுள்ளார்)

- இலக்கணக் குறிப்புக்கள், அருஞ்சொல் அகராதி, சொல்லிலக்கண ஆராய்ச்சிப் பதிப்புக்கள் செய்துள்ளார். சிலவற்றுக்கு உரை எழுதிப் பதிப்பித்துள்ளார். உதாரணம்: ஔவையார் அருளிச் செய்த நல்வழி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன்

- சில செய்யுள் நூல்களை வசனநடையில் எழுதிப் பதிப்பித்தார். உதாரணம்: திருவிளையாடற் புராண வசனம், பெரியபுராண வசனம், கந்தபுராண வசனம் அப்பியாசங்களோடு பாடநூல்கள் சிலவற்றையும் எழுதிப் பதிப்பித்தார்.

- இலங்கையில் சைவ ஊடகத்துறை, பத்திரிகைத்துறை வளர்ச்சியுற வித்திட்டமை. இலங்கைநேசன் என்னும் பத்திரிகை வளர்ச்சிக்கு உதவியமை, சைவ உதய பானு என்னும் பத்திரிகையை வெளியிட ஆர்வம் காட்டியமை.

**(5 புள்ளிகள்)**

இ) சமூகப் பணி

- 1876 ஆம் / 77 ஆம் ஆண்டுகளில் கடும் வரட்சியால் ஏற்பட்ட பஞ்சவேளையில் கஞ்சித்தொட்டித் தருமம் மேற்கொண்டமை.

- யாழ்ப்பாண கரையூர் உள்ளிட்ட இடங்களில் பேதி நோய் பரவியபோது மக்களுடன் மக்களாக நின்று முதலுதவிகளையும் தக்க பரிகாரங்களையும் மேற்கொண்டமை.

- சமூகத்தைப் பாதிக்கும் மதுபாவனை, சூதாடுதல் முதலியவற்றை ஒழிக்கப் பாடுபட்டார். யாழ்ப்பாணக் கச்சேரி நிர்வாகத்தின் ஊழல்கள் தொடர்பாக 1878 ஆம் ஆண்டு அங்கு வந்த தேசாதிபதிக்கு விண்ணப்பம் ஒன்றை வழங்கினார்

- தமிழ் சமூகத்திற்காக தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைச் செம்மைப்படுத்தினார். செய்யுள் நடையிலுள்ள பழங்கால இலக்கியங்களுக்கு உரைசெய்தார்.

- பிறரை உரியவேளையில் கௌரவித்தமை. உ – ம்: நந்தனார் சரித்திரக் கீர்த்தனையைப் பக்திரசம் சொட்டப் பாடிய கோபால கிருஷ்ண பாரதியாருக்கு நாவலர் சன்மானம் வழங்கிக் கௌரவித்தமை.

(5 புள்ளிகள்)

ஈ) சமயப்பணி:

- சைவப் பிரசங்கங்களை ஆற்றியமை. உதாரணம்: வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரர் ஆலயம்.

- புராணபடனங்கள் நிகழ்த்தியமை உதாரணம்: நல்லூர் கந்தசுவாமி கோயில்

- ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்தமை. உதாரணம்: திருக்கேதீச்சரம், திருக்கோணேசுவரம் மன்னாருக்கு சமீபத்திலுள்ள மாதோட்டம் என்னும் நன்நகரில் தேன்பொந்தொன்று உள்ளது. அதனைச் சென்றடையுங்கள்" என விஞ்ஞாபனம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

- சைவ சமய நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்டமை. உதாரணம்: சைவ வினாவிடை முதற்புத்தகம், இரண்டாம் புத்தகம், இலக்கண நூல்கள் பலவற்றை வெளிக்கொணர்தல்.
- பண்ணிசையினை வளர்த்தமை. உதாரணம்: நல்லூர் மகோற்சவ காலங்களில் திருவாவடுதுறையிலிருந்து ஓதுவார்களை அழைத்து தமிழ் வேதப்பாக்களை ஓதுவித்தமை.
- பிரமச்சரிய வாழ்வினைச் சீராக வாழ்ந்து காட்டியமை.
- பிறசமயக் கண்டனங்களையும் அகச்சமயக் கண்டனங்களையும் மேற்கொண்டமை. கண்டனப் பிரசுரங்கள் மூலம் சைவத்தின் மாண்பை நிலைநிறுத்தியமை. உதாரணமாக, சைவதூஷண பரிகாரம், நல்லூர் கந்தசுவாமி கோயில், யாழ்ப்பாணத்துச் சமயநிலை.

(5 புள்ளிகள்)

**7. ஆகமம் சாரா வழிபாட்டு நெறியில் மேல்வரும் தெய்வங்களுக்கு உரிய இடத்தினை விளக்குக.**

**அ) கண்ணகி**

- இவ் வழிபாடு 2ஆம் கஜபாகு மன்னனால் ஆரம்பிக்கப்பட்டது.
- அங்கணாமைக் கடவை எனும் இடத்தில் முதலாவது கோயில் கண்ணகிக்கு கட்டப்பட்டது.
- கஜபாகு மன்னன் ஆடிமாதந்தோறும் அனுராதபுரத்தில் விழா எடுக்கும் வழக்கத்தினை மேற்கொண்டான்.
- சிங்களவர்கள் பத்தினி தெய்யோ என அழைத்து கண்ணகியை வழிபட்டனர்.
- அளவெட்டி, சுருவில், கோப்பாய், நயினாதீவு, செட்டிபாளையம், வற்றாப்பளை, பூநகரி முதலான இடங்களில் கண்ணகிக்கு கோயில்களுண்டு.
- கண்ணகி வழிபாட்டுச் சடங்குகள் பிரதேச ரீதியாக சிறுசிறு வேறுபாடுகளுடன் இடம்பெறுகின்றன.
- வைகாசித் திங்களில் வருவேன் என்று கண்ணகி கூறியபடி வைகாசிப் பூரணையைக் குளிர்த்தி நாளாகக் கொண்டு மூன்று, ஐந்து, ஏழு நாட்கள் சடங்குகள் இடம்பெறும்.
- முதல் நாள் சடங்காக ஊர்க்காவல் செய்தல், மடைவைத்தல். கற்பூரதீபம் ஏற்றி கதவைத்திறத்தல்
- ஆலய மண்டபத்தில் நெற்குவியலில் கமுகம்பாளை, வேப்பிலை முதலான அலங்காரத்துடன் பூரண கும்பம் வைக்கப்படும்.
- கலியாணக்கால் வெட்டுதல், விநாயகர் பானை வைத்தல்.
- கதவு திறந்தபின் தினமும் ஏடு படித்தல்.

**(5 புள்ளிகள்)**

**ஆ) அண்ணமார்**

- கிராமப்புற மக்களின் மரபுவழி சார்ந்த பண்பாட்டுப் பாரம்பரியப் பேணலாக சிறுதெய்வ வழிபாடுகள் காணப்படுகின்றன.
- கிராமிய வழிபாட்டில் இடம்பிடித்திருக்கின்ற ஆண்தெய்வங்களுள் அண்ண(ன்)மாரும் ஒருவர்.
- 15ம் நூற்றாண்டளவில் தோன்றியதாகப் பலராலும் ஒப்புக் கொள்ளப்படுகின்ற அண்ணமார் வழிபாடு கிராமிய வழிபாடுகளில் சிறப்புப் பெறுகின்றது.
- கொங்கு நாட்டில் சிறப்புப் பெற்ற இவ்வழிபாட்டு முறைமை யாழ்ப்பாணத்தவரிடையே குறிப்பிட்ட சாதியினரிடத்து அவர்களின் குலதெய்வமாக எங்ஙனம் மாறியதென்பது குறித்த வரலாறுகள் அறியுமாறில்லை.
- சிவக்குடும்பன், அண்ணமார், பொல்லுக்கிழவன் என அழைக்கப்படுதல்.
- கருவறையினுள் அண்ணமாரைக் குறிக்கும் வகையில் 'மூன்று பொல்லுகள்' வைக்கப்பட்டு வழிபாடுகள் இடம்பெறும்.
- வீடுகளில் வாசித்தல், மேடையில் பாடுதல். உடுக்கடித்துப் பாடுதல், வேறு பக்க வாத்தியங்களுடன் பாடுதல், கிராமங்களில் 18 நாட்கள் தொடர்ச்சியாகப் பாடி நடிக்கப்படுதல், நாடக வடிவத்தில் நடித்தல் முதலிய பல வடிவங்களில் காப்பியச் சுவை வெளிப்பட அண்ணன்மார் காப்பியம் நிகழ்த்தப்படுகிறது.
- யாழ்ப்பாணத்தில் அண்ணன்மார் தொடர்பாகப் பதியப்பட்ட நான்கு வேறுபட்ட ஐதீகங்கள் உள்ளன.
  1. இணுவில் இளந்தாரி அண்ணமார் கதை.
  2. வன்னிச்சிமார் 54 பேருடன் தற்கொலை செய்து கொண்ட வீரகுடும்பனைத் தலைவனாகக் கொண்ட 60 விவசாயக் கூலிகள் அண்ணமாரான கதை: வன்னியுடன் தொடர்பானது.
  3. புராணக்கதைகளுடனான அண்ணமார் கதைகள்
  4. தக்கன் யாகம் அழிக்க அண்ணமார் வந்தது.
  5. சூரன் கொடுமைக்குப் பயந்து இயன-குட்டானுள் (கமக்காரனாகி) அண்ணமார் ஒளித்த கதை. (புத்திரகாளி- தச்சரிடம், பெரிய தம்பிரான்- வண்ணாரிடம்)

4. தமிழகத்தில் கொங்கு நாட்டிலும் இலங்கை மலையகத்திலும் வழக்கிலுள்ள அண்ணமார் சுவாமி கதை - பொன்னர் - சங்கர் கதை

**(5 புள்ளிகள்)**

**இ) பெரியதம்பிரான்**

- இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிராந்தியங்களில் குலவழி நாட்டார் தெய்வங்களின் வரிசையில் வழிபடப்படும் முக்கிய ஆண்தெய்வங்களில் ஒன்றாகப் பெரிய தம்பிரான் விளங்குகின்றது.
- இத்தெய்வ வழிபாட்டு நம்பிக்கைகள் தக்கனின் யாகத்துடன் தொடர்புடையன.
- இத்தெய்வம் 'படிமத்தான்' என்ற பெயரோடு வணங்கப்படும்.
- வடக்கில் பிரபல்யமாக 17 ஆலயங்களும் கிழக்கில் 11 ஆலயங்களும் இனங்காணப்பட்டுள்ளன.
- ஆடியில் நடைபெறும் வேள்வி இவ்வழிபாட்டு முறைகளில் மிகுந்த முக்கியத்துவம் உடையது.
- வடக்கில் ஏழாலை, தும்பளை, நீலியம்பனை, பொலிகண்டி போன்ற இடங்களிலும், கிழக்கில் கொம்மாதுறை, சித்தாண்டி, தாழங்குடா முதலான இடங்களிலும் பெரியதம்பிரான் ஆலயங்கள் காணப்படுகின்றன.
- இத்தெய்வமானது, 'நீலசோதயன்' என்ற தெய்வத்துடன் இணைந்த நிலையில் வணங்கப்படுகின்றது.
- கிழக்கு மாகாணத்தில் 'பெரியதம்பிரான் பத்தாசி', 'கட்டாடி முதலிமார் பத்தாசி' என்ற இரண்டு சடங்கு முறை நூல்கள் இவ்வழிபாட்டினை நெறிப்படுத்துகின்றன.
- முகக்களை, சூலவடிவம், பீடவடிவம், ஆகியவை பெரியதம்பிரான் ஆலயங்களில் வைத்து வணங்கப்படுகின்றன.

**(5 புள்ளிகள்)**

**ஈ) ஐயனார்**

- நாட்டுப்புறக் காவல் தெய்வங்களில் ஒன்றாக வழிபடப்படுபவர்.
- ஐயனார் என்ற சொல்லில் ஐ - தலைவன், அன் - ஆண்பால், ஆர் - மரியாதை விகுதி.
- குலதெய்வ வழிபாட்டில் சிறப்புப்பெறும் ஆண் தெய்வங்களில் ஐயனாருக்கும் தனித்துவமான இடமுண்டு.
- கிராமங்களில் ஊருக்கு வெளியே கிராமத்தைக் காப்பவராகவும், விளைச்சலைப் பெருக்குபவராகவும், கால்நடைகளைப் பாதுகாப்பவராகவும் விளங்குகின்றார்.
- இவரது வாகனம் குதிரையாகும்.
- இலங்கையில் காரைநகர், சுன்னாகம், அனலைதீவு முதலான இடங்களில் வரலாற்றுச் சிறப்புடைய ஐயனார் ஆலயங்கள் காணப்படுகின்றன.
- சர்க்கரைப் பொங்கல் படைக்கப்படுகின்றது.
- ஆரம்ப காலங்களில் திறந்த வெளியிலே ஐயனார் வழிபடப்பட்டார்.

**(5 புள்ளிகள்)**

**8. இந்துக்களின் வாழ்வியலை நெறிப்படுத்துவதில் மேல்வரும் நூல்கள் பெறும் முக்கியத்துவத்தினை எடுத்துக் கூறுக.**

**அ) வேத உபநிடதங்கள்**

- வித் என்ற வினையடியாகப் பிறந்தது வேதம் என்ற சொல்.
- வித் என்றால் அறிவு எனப்பொருள்படும்.
- வேதங்கள் அறிவுக்களஞ்சியமாகச் சொல்லப்படுகின்றன.
- இயற்கை வழிபாட்டிற்கு முதன்மை.
- ஒழுக்கக் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்துக்களைக் கொண்டிருத்தல்.
- வருணன் ஒழுங்கின் பாதுகாவலன். (ரிதர்க்ஷயகோபா) எனப் போற்றப்படுதல்.
- தனிமனித சமூக கடமைகள் பற்றிய கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.
- பிதிரர் வழிபாடு
- துதிப்பாடல்கள், பிற்காலத் தோத்திரப்பாடல்களுக்கு முன்னோடி
- 'வேதோகிலோ தர்மமூலம்' என ஸ்மிருதிகள் கூறும்
- 'வேதத்தை விட்ட அறமில்லை.....' என்பார் திருமூலர்.
- அதர்வன வேதத்தில் சமுதாய வாழ்வியலில் முக்கியம் பெறுகின்ற திருமணச்சடங்கு மரணச்சடங்கு, (18ஆம் காண்டம்) போன்றவை பற்றிய விளக்கங்கள் காணப்படுகின்றன.
- அபிசாரணியப் பகுதிகள் மாந்திரீகப் பெறுமதியுடையவை.
- உழவு, அறுவடை, புதுமனை நிர்மாணித்தல் (பௌசுஷ்டிகாணி), ஆடவர் பெண்டிர் நலவாழ்வு, (ஸ்திரி, புருக்ஷ கர்மாணிப்பகுதிகள்)
- நோய்நீக்கம் - மருத்துவப் பெறுமதியுடைய பகுதிகள் (பேக்ஷயாணி)
- இந்துசமய வாழ்வியலில் அறவியல், ஆன்மிக ரீதியில் சிறப்பான கருத்துக்களை வழங்கியமை வேதங்களின் சிறப்பாகும்.
- அருகில் (உப) ஈடுபாட்டுடன் (நி) உட்கார்ந்திருத்தல்(சத்) என்பதே உபநிடதம் என்பதன் பொருளாகும். அதாவது, மறைபொருள் கோட்பாடுகளை அறிவுறுத்தும் ஞானாசிரியனுக்கு அருகில் இருந்து மாணவன் சிரத்தையுடன் கற்றலை உபநிடதம் என்ற சொல் குறிக்கிறது.
- அனைவரிலும் தெய்வீகம் உண்டு. அனைவரையும் நேசி, அனைவரிடமும் அன்பாயிரு எனும் உயர் மனிதநேயப் போதனைகள்
- மிகவுயர்ந்த ஒழுக்க விழுமியங்களை சிறந்த அறப்பண்புகளாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. உதாரணம்..

  சத்யம் வத - உண்மை பேசு
  தர்மம் சர - தர்மவழியில் நட
  சத்யாத்மப்பிரம்ம திரவ்யம் - சத்தியத்திலிருந்தும் நழுவுதல் கூடாது
  தர்மாத்மநப்பிரம்ம திரவ்யம் - தர்மத்திலிருந்தும் நழுவுதல் கூடாது
  பூத்ஜை நப்பிரம்ம திரவ்யம் - பெருமையுள்ளவற்றைப் போற்றத் தவறக்கூடாது
  மாத்ரு தேவோ பவ - தாயைத் தெய்வமாகப் போற்றுக
  பித்ருதேவோ பவ - பிதாவைத் தெய்வமாகப் போற்றுக
  ஆசார்ய தேவோ பவ - ஆசாரியனைத் தெய்வமாகப் போற்றுக
  அதிதி தேவோ பவ - விருந்தினரைத் தெய்வமாகப் போற்றுக
  சத்ய மேவ ஜயதே - சத்தியத்தினின்றும் விலகாதே
- ஒரு தொழிலைச் செய்வது கருமம், வேத சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்வது தருமம்.
- உபநிடதமகாவாக்கியங்களூடாகவும் மனிதவாழ்வியலுக்கு அவசியமான கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன.

**(10 புள்ளிகள்)**


Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

**ஆ) திருக்குறள்**

- தமிழிலுள்ள அறநூல்களுள் எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய கருத்துச் செறிவுள்ள நீதிநூலாகத் திருக்குறள் போற்றப்படுகின்றது. இது அடிப்படையில் ஒரு வாழ்வியல் நூல்.
- மனிதர்கள் தம்வாழ்வில் கூடிவாழ்தல், நலமுடனும் இன்பமுடனும் வாழ்தலுக்குத் தேவையான அடிப்படைப் பண்புகளையும் அறக்கருத்துக்களையும் விளக்குகின்றது.
- தனிமனிதன், குடும்பம், சமூகம், உலகம் சார்ந்த நிலையில் ஒழுக்கத்துடனும் அறத்துடனும் வாழப் பல நல்லுபதேசங்களும் சிந்தனைகளும் திருக்குறளில் உள்ளடங்கியுள்ளமை சிறப்பம்சமாகும்.
- மனத்துக்கண் மாசிலன் ஆதல் தனிமனித வாழ்வுக்கு மிகவும் முக்கியத்துவமுடைய அறவுரை. மனத்தில் ஒருவன் குற்றமில்லாதவனாய் இருப்பதே ஒழுக்கம், அறம் ஆகின்றது.
- நற்செயல்களில் ஈடுபடுவதை வள்ளுவர் உயர்ந்த அறமாகப் போற்றுகின்றார். பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இந்நான்கு குற்றங்களைக் களைந்து வாழ்வதே அறம்.
- அன்புடைமை, அருளுடைமை, அடக்கமுடைமை, அழுக்கறாமை இனியவை கூறல், இன்னா செய்யாமை, ஈகை, ஒழுக்கமுடைமை, சிற்னஞ்சேராமை, சான்றாண்மை, கூடா ஒழுக்கம், செய்நன்றி அறிதல். நட்பு, பெரியாரைத் துணைக்கோடல், விருந்தோம்பல், வாய்மை, குற்றங்கடிதல் போன்ற அதிகாரங்களில் வள்ளுவர் மக்களது நிறைவான வாழ்க்கைக்குத் தேவையான நல்லுபதேசங்களைக் கூறியுள்ளார்.
- நல்லொழுக்கம் ஒன்றே நிறைவான வாழ்வுக்கு அடிப்படை. இல்லறவியல் சமூக அமைப்பில் சிறப்புப் பெறுகின்ற காரணத்தால் வள்ளுவர் இல்லறத்தானது ஒழுக்க நெறிபற்றிக் கூறுகின்றார்.
- இல்லற வாழ்வில் ஒருவன் இல்லாளோடு இணைந்து செய்யவேண்டிய கடமைகள் பல. பிறருக்கு நன்மை செய்தல், குழந்தைகளின் கடமைகளை நிறைவேற்றல்,
- நால்வகை ஆச்சிரமங்களில் இல்லறதர்மம் முக்கியத்துவம் பெறுகின்றது. அறம், பொருள், இன்பம், வீடு நான்கையும் அடைய இல்லற தர்மம் முக்கியமானது.
- பிதிரர், தெய்வம், விருந்து சுற்றத்தவர்களை இல்லறத்தில் பேணுவது தலையாய கடமைகள் என வள்ளுவர் உபதேசிக்கின்றார்.
- இல்வாழ்வான் பெறும் உயர்ந்த பேறு மக்களது நிறைவாழ்வுக்கு வழிவகுக்கின்றது.
  "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
  தெய்வத்துள் வைக்கப்படும்" எனச் சிறப்பிக்கின்றார்.
- வள்ளுவர் கூறும் நல்லுபதேசங்களில் கல்வி சிறப்புப் பெறுகின்றது.
- கல்வி ஒருவனது வாழ்வு வளம்பெற பெரிதும் இன்றியமையாதது. கல்வி பற்றியும், கல்லாமையினால் ஏற்படும் துன்பம் பற்றியும் கூறுகின்றார்.
- கற்கவேண்டியனவற்றைக் கற்று அதன்வழி ஒழுகுதல் ஒருவனது வாழ்வு செம்மையடைய பெரிதும் வேண்டற்பாலதாகும்.
  "கற்ககசடறக் கற்பவை கற்றபின்
  நிற்க அதற்குத் தக" என்கிறார்.
- கல்வியானது சீரிய செல்வம், அழிவற்றது என்று கூறுவது வாழும் மக்களுக்குப் பெரிதும் உதவும் அறிவுரையாகும்.
- கற்றதனால் ஒருவனுக்குக் கிட்டும் பயன் ஞானவடிவினனாகிய இறைவனை வழிபடுதலாகும். என்ற உயர்ந்த பயனை வள்ளுவர் மக்களின் நிறைவான வாழ்வுக்குரிய உபதேசமாகக் கூறுகின்றார்.
- இறைவனடியைப் போற்றுகின்றவர்களுக்கு எவ்வித துன்பம் வராது என்ற வள்ளுவரது நல்லுபதேசம் மக்களது வாழ்வுக்கு பெரும்பயனைத்தரவல்லது.

PAST PAPERS WIKI

**(10 புள்ளிகள்)**

(29) WWW.PastPapers.WiKi (29)

LOL.lK
Learn Ordinary Level

All | Search Books Here... | Search

Hotline
071 777 4440

0

Log in
Register

Shop By Grade

Home | Shop | Contact Us

Track Your Order | Checkout



2024 A/L Tamil Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO



2024 A/L Political Science Past Paper Book (Tamil Medium)
රු 1,200.00
or 3 X රු 400.00 with KOKO



2024 A/L Islamic Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO



2024 A/L Islamic Civilization Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO



2024 A/L Geography Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO



2024 A/L Art Past Paper Book (Tamil Medium)
රු 500.00
or 3 X රු 166.67 with KOKO



2024 A/L SFT Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO



2024 A/L ICT Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO



2024 A/L ET Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO



2024 A/L BST Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO



2024 A/L Agricultural Science Past Paper Book (Tamil Medium)
රු 1,100.00
or 3 X රු 366.67 with KOKO



2024 A/L Common General Test Past Paper Book (Tamil Medium)
රු 600.00
or 3 X රු 200.00 with KOKO



2024 A/L Business Studies Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO



2024 A/L Accounting Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO



2024 A/L Economics Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO



2024 A/L Chemistry Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO



2024 A/L Biology Past Paper Book (Tamil Medium)
රු 750.00
or 3 X රු 250.00 with KOKO



2024 A/L Physics Past Paper Book(Tamil Medium)
රු 1,050.00
or 3 X රු 350.00 with KOKO

**Free Delivery**
For all orders over 10000LKR

**Secure Payment**
100% secure payment

**24X7 Support**
Quick Support

**03 Days Return**
Call for Help 071 777 4440

Terms and Conditions | Refund Policy | Privacy Policy

**LOL STORE PVT LTD** Copyright ©2023

We Using Safe Payment For

Easy Monthly Installments | KOKO | CASH ON DELIVERY | VISA